# மீட்பின் அன்னை நம் அன்னை

மீட்பின் அன்னை நம் அன்னை
மீட்பரின் தாயே எம் அன்னை

**1**
நாடிழந்தோரும் வீடிழந்தோரும் நாடியதால் அணைத்தாய்
அவர் தேடிய அன்பளித்தாய்
ஈடிணையில்லா இறையருள் எம்மில்
கூடிவரும் இந் நந்நாளில் - மலர்
சூடுவோம் உன் தாளில்

**2**
ஆறுதலாலும் ஆதரவாலும் பாருலகம் நிறையும்
மன மாறுதலும் வளரும்
போர்களும் நீங்கும் நிம்மதி ஓங்கும்
சோர்வுகள் தீரும் உன்னாலே - புது
வாழ்வினி உண்டாகும்